வேளாண்மைத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண்.5 – வேளாண்மை

# 2015–2016

**திரு ஆர். வைத்திலிங்கம்**
**வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும்**
**வேளாண்மைத்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2015

## கொள்கை விளக்கக் குறிப்பு 2015–16

## பொருளடக்கம்

| பொருள் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| 1. வேளாண்மை | 4 |
| 2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் | 37 |
| 3. வேளாண்மைப் பொறியியல் | 54 |
| 4. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி | 66 |
| 5. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று | 84 |
| 6.வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | 90 |
| 7. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை | 104 |

# 1. வேளாண்மை

## 1. முன்னுரை

மழையளவு, மண்ணின் தன்மை, பாசன வசதி மற்றும் பயிர் சாகுபடி முறையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஏழு வேளாண் தட்ப வெப்ப மண்டலங்கள் உள்ளன.

மாநிலத்தில், 17.75 இல.எக்டரில் (31%) நெற்பயிரும், 6.99 இல.எக்டரில் (12%) சிறு தானியங்களும், 6.34 இல.எக்டரில் (11%) பயறு வகைகளும், 4.38 இல.எக்டரில் (8%) எண்ணெய்வித்துக்களும், 3.24 இல.எக்டரில் (6%) கரும்பு பயிரும், 1.29 இல.எக்டரில் (2%) பருத்தியும், 4.29 இல.எக்டரில் (8%) தென்னையும், 12.22 இல.எக்டரில் (22%) தோட்டக்கலைப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

2013–2014ஆம் ஆண்டில், மத்திய அரசின் புள்ளியியல் அறிக்கையின்படி, உற்பத்தித்திறனில் **தேசிய அளவில்** தமிழ்நாடு **மக்காசோளம், நிலக்கடலை மற்றும் மொத்த எண்ணெய் வித்து பயிர்களில் முதலிடமும், கரும்பு பயிரில் இரண்டாமிடமும், அரிசி மற்றும் சூரியகாந்தி பயிர்களில் மூன்றாமிடமும்** அடைந்துள்ளது.

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தின் (2012–2017) இறுதி ஆண்டில், உணவு தானியங்களில் 170 இலட்சம் மெ.டன், பருத்தியில் 5 இலட்சம் பொதிகள், கரும்பில் 545 இலட்சம் மெ.டன் மற்றும் எண்ணெய் வித்துக்களில் 17 இலட்சம் மெ.டன் உற்பத்தி அடைவதே வேளாண் துறையின் நோக்கமாகும். வேளாண் உற்பத்தி திறனை உயர்த்தும் நோக்கில் பயிருக்கு உகந்த உத்திகளை



மேற்கொண்டு, உற்பத்தியை அதிகரிக்க இத்துறை தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

## 2. பருவநிலை

### 2.1 மழையளவு

மாநிலத்தில் 2014ஆம் ஆண்டில், கோடை காலத்தில் அதிக மழையும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ காலங்களில் இயல்பான மழையும், குளிர் காலத்தில் குறைவான மழையும் பெறப்பட்டது. 2013–ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், குளிர் மற்றும் தென்மேற்கு பருவங்களில் பெறப்பட்ட குறைவான மழை காரணமாக 2014 காரீப் பருவத்தில் பயிர் சாகுபடி பரப்பளவில் குறைவு ஏற்பட்டது.

### 2.2 பயிர் நிலை

#### 2.2.1. குறுவை நெல் சாகுபடி – 2014–2015

பாசனத்திற்காக மேட்டூர் அணை, 2014 ஆகஸ்ட் 10ம் தேதி அன்றுதான் திறக்க முடிந்தது. இந்நிலையில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், **ரூ.32.95 கோடி** நிதி ஒதுக்கீட்டில் **அறிவிக்கப்பட்ட குறுவை சாகுபடிக்கான சிறப்புத் திட்டம் மூலம் 4,08,822 விவசாயிகள் பயன்பெற்றனர்.** இந்த அறிவிப்பில் **12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கியதோடு,** உற்பத்தி திறன் அதிகரிக்கும் இடுபொருட்களை மானியத்தில் விநியோகித்தல், சமுதாய நாற்றங்கால் அமைத்து 100 சதவீத மானியத்தில் விநியோகித்தல் போன்ற இனங்கள் இந்த அறிவிப்பில் இடம் பெற்றன. மேலும் ரூ.1399 இலட்சம் செலவில் 6993 அலகுகள் ‘அடர்திறன் கொண்ட குழாய்கள்’ டெல்டா மாவட்டங்களில் உள்ள 6993 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இவற்றுடன்

ரூ.**440.60** இலட்சம் செலவில் விலையில்லா **200** நெல் நடவு இயந்திரங்களும், **200** நெற்பயிருக்கான விசை களை எடுக்கும் கருவிகளும் டெல்டா மாவட்ட விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்பட்டன. இதனால் வடிமுனைக் குழாய் பாசனப் பகுதிகளில் இயல்பு பரப்பான **ஒரு இலட்சம் ஏக்கருக்குப்** பதிலாக **2.56 இல.ஏக்கரில் நெற்பயிர் சாகுபடி** மேற்கொள்ளப்பட்டது.

### 3. பயிர் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன்

**2014–2015** ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்கள் மற்றும் புதிய உத்திகளை செயல்படுத்தியதன் விளைவாக, மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக அடையப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. **2013–2014** ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில், **2014–2015** ஆம் ஆண்டில் பல்வேறு பயிர்களில் எதிர்பார்க்கப்படும் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் பின்வருமாறு:

| பயிர் | பரப்பு (இல.எக்டர்) | | உற்பத்தி (இல.மெ.டன்) | | உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்) | |
|---|---|---|---|---|---|---|
| | **2013–14** | 2014-15* | 2013-14 | 2014-15* | 2013-14 | 2014-15* |
| அரிசி | 17.26 | 18.30 | 71.15 | 79.14 | 4122 | 4325 |
| சிறுதானியங்கள் | 9.33 | 9.71 | 32.73 | 41.58 | 3508 | 4289 |
| பயறு வகைகள் | 8.16 | 9.40 | 6.14 | 7.24 | 752 | 769 |
| **மொத்த உணவு தானியங்கள்** | 34.75 | 37.41 | 110.02 | 127.96 | | |
| எண்ணெய் வித்துக்கள் | 4.08 | 4.19 | 9.61 | 9.73 | 2355 | 2322 |
| பருத்தி (**) | 1.51 | 1.87 | 4.17 | 6.28 | 469 | 570 |
| கரும்பு (***) | 3.13 | 2.63 | 324.54 | 244.63 | 104 | 93 |
| **மொத்தம்** | 43.47 | 46.10 | | | | |

* **நான்காம் முன் மதிப்பீடு**

(**)உற்பத்தி (இல. பொதிகள்) ; (***)உற்பத்தி திறன் (மெ.டன்/ எக்டர்)



**2015–2016 ஆம் ஆண்டுக்கான பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தித் திட்டம்**

| பயிர் | பரப்பு (இல.எக்டர்) | உற்பத்தி (இல.மெ.டன்) | உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்) |
|---|---|---|---|
| அரிசி | 21.00 | 93.00 | 4429 |
| சிறுதானியங்கள் | 12.00 | 45.00 | 3750 |
| பயறு வகைகள் | 11.00 | 9.00 | 815 |
| **மொத்த உணவு தானியங்கள்** | 44.00 | 147.00 | |
| எண்ணெய் வித்துக்கள் | 5.62 | 13.85 | 2464 |
| பருத்தி (*) | 1.80 | 7.50 | 700 |
| கரும்பு (**) | 3.60 | 400.00 | 111 |
| **மொத்தம்** | 55.02 | | |

(*)உற்பத்தி (இல. பொதிகள்) ; (**)உற்பத்தி திறன் (மெ.டன்/ எக்டர்)

### 3.1 கரும்பு

தமிழ்நாட்டில் கரும்பு இரண்டாவது முக்கிய வேளாண் சார்ந்த தொழிற்பயிராகும். **3.50** இலட்சம் எக்டர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இது மொத்த சாகுபடி பரப்பில் **5** சதவிகிதம் ஆகும். நமது மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி இந்திய சர்க்கரை உற்பத்தியில் **7 – 9** சதவீதம் ஆகும். நுண்ணீர் பாசன பயன்பாடு, அகல பார்களில் நிழல்வலை நாற்று பண்ணையிலிருந்து கிடைக்கும் **25** முதல் **30** நாட்கள் வயதுடைய செதில்பரு நாற்று நடவு மற்றும் உரப்பாசனம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்பமான நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில், நான்காம்

முன்மதிப்பீட்டின்படி 2.63 இலட்சம் எக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு, 244.63 இலட்சம் டன்கள் கரும்பு உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தியாகும் கரும்பு, மாநிலத்தில் இயக்கத்தில் உள்ள 43 சர்க்கரை ஆலைகளால் அரைவை செய்யப்படுகிறது. இவற்றில் கூட்டுறவுத் துறையில் 16 சர்க்கரை ஆலைகளும், பொதுத்துறையில் 2 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையில் 25 சர்க்கரை ஆலைகளும் உள்ளன.

கரும்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு நியாயமான மற்றும் ஆதாய விலையை அறிவித்து வருகிறது. தமிழக அரசு, நியாயமான மற்றும் ஆதாய விலை மற்றும் மாநிலத்தின் கரும்பு சாகுபடி செலவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு பரிந்துரை விலையை அறிவித்து வருகிறது. 2014–2015ஆம் அரைவைப் பருவத்திற்கு 9.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு, டன் ஒன்றுக்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக ரூ.2200/- எனவும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.23.20 எனவும் மத்திய அரசு அறிவித்தது. இருப்பினும் தமிழக அரசு 2014–2015 ஆம் அரைவைப் பருவத்திற்கு, மாநில அரசின் பரிந்துரை விலையாக கரும்புக்கு டன் ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவினம் ரூ.100/– உட்பட, ரூ.2650/– என உயர்த்தி அறிவித்துள்ளது.



## 4. இடுபொருட்கள்

### 4.1. விதைகள்

வேளாண்மையில் விதை மிகவும் இன்றியமையாத இடுபொருளாகும். அனைத்து பயிர்களிலும் விதை தேவையை பூர்த்தி செய்வதற்காக வேளாண் துறை விதை உற்பத்தி திட்டத்தை வகுத்துள்ளது. தன் மகரந்த சேர்க்கை பயிர்களான நெல், கேழ்வரகு, பயறு வகைகள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் விதை மாற்று விகிதம் 33 சதவீதமும், அயல் மகரந்த சேர்க்கைப் பயிர்களான சோளம், கம்பு மற்றும் பருத்தி பயிர்களில் 50 சதவீதமும், வீரிய ஒட்டு இரகங்களில் 100 சதவீதமும் அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு ஆண்டுக்கு 29,600 மெ.டன் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்ட, 16 பெரிய, 2 நடுத்தர மற்றும் 63 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்களை அரசு அமைத்துள்ளது. நில மேம்பாடு, அறிவியல் சார்ந்த சாகுபடி முறைகளை மேற்கொள்ளுதல், நவீன சாகுபடி தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்துதல், தேவையான பாசன வசதிகளை ஏற்படுத்துதல், பண்ணை இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொண்டு ஐந்து வருடங்களில் மாநில விதைப்பண்ணைகளை வலுப்படுத்தி தொழில்நுட்ப தகவல் மற்றும் செயல் விளக்க மையங்களாக மாற்ற துறை திட்டமிட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில், 34,650 மெ.டன் நெல், 5,085 மெ.டன் பயறு வகைகள், 6,000 மெ.டன் எண்ணெய் வித்துக்கள், 425 மெ.டன் சிறுதானியங்கள் மற்றும் 40 மெ.டன் பருத்தி சான்று விதை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.2. பேரூட்டச் சத்துக்கள்

ஊட்டச்சத்து மேலாண்மை, நீடித்த நிலையான மண்வளப் பாதுகாப்பின் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. நிலைத்த சுற்றுச் சூழலுக்கு உகந்த இரசாயன உரங்களை சமச்சீரான அளவில் உபயோகிப்பதை ஊக்கப்படுத்தவும் அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. விவசாயிகளின் பண்ணைகளில் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், நிலவுடைமைகள், மண்வளம் குறித்த விபரங்கள், உகந்த பயிர் சாகுபடிமுறை, குறிப்பிட்ட பயிருக்கான உர பரிந்துரைகளை உள்ளடக்கிய கையேட்டினை அனைத்து விவசாயிகளுக்கும் அரசு வழங்கியுள்ளது.

பயிர் சாகுபடி முறையின் அடிப்படையில் வேளாண்மைத் துறை ஆண்டுதோறும் உரத் திட்டத்தினை வகுத்து, அதனடிப்படையில் மத்திய அரசின் உரத் துறையிலிருந்து உரங்களைப் பெற்று மாநிலத்தில் விநியோகம் செய்து வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட உரங்கள் மற்றும் 2015–2016 ஆம் ஆண்டிற்கான உரத்தேவை விபரம் பின்வருமாறு:

(இல.மெ.டன்)

| உரம் | ஒதுக்கீடு 2014–2015 | விநியோகம் 2014–2015 | தேவை 2015–2016 |
|---|---|---|---|
| யூரியா | 10.50 | 9.77 | 9.80 |
| டி.ஏ.பி | 3.75 | 2.33 | 3.10 |
| பொட்டாஷ் | 4.00 | 2.88 | 4.30 |
| காம்ப்ளக்ஸ் | 6.50 | 4.87 | 6.40 |

விவசாயிகளுக்கு காலத்தே உரங்கள், குறிப்பாக யூரியா கிடைப்பதை உறுதி செய்ய தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. உரங்களின் விலையைக்



குறைக்கும் முயற்சியாக, மாநிலத்தில் இரசாயன உரங்கள் மீதான 4 சதவீத மதிப்பு கூட்டு வரியிலிருந்து மாநில அரசு விலக்களித்துள்ளது. நாப்தா அடிப்படையிலான யூரியாவை மாநிலத்தில் தொடர்ந்து உற்பத்தி செய்யும் பொருட்டு, எம்.எப்.எல். மற்றும் ஸ்பிக் உர நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் நாப்தா மீதான 5 சதவீத மதிப்புக்கூட்டு வரியிலிருந்தும் விலக்களித்துள்ளது. போதுமான அளவு உரங்களை கொள்முதல் செய்து இருப்பு வைத்து, பயிர்சாகுபடி பருவங்களில் ஏற்படும் உரத் தட்டுப்பாட்டை தவிர்க்கவும், 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஆண்டுதோறும் டான்பெட் நிறுவனத்திற்கு வட்டியில்லா கடனாக ரூ.150 கோடி வழங்கி வருகிறது.

## 5. திட்டங்கள்

### 5.1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் 4 சதவீத வளர்ச்சியை அடைவதே தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை இத்திட்டம் மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டு முதல், இத்திட்டம் 50:50 என்ற விகிதத்தில் மத்திய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் துவரை சாகுபடியை ஊக்குவிக்கும் திட்டங்கள், நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி திட்டம், கரும்பு சோகை நிலப்போர்வை மூலம் மண் வளத்தை அதிகரித்தல், தென்னங்கன்றுகள் விநியோகம், உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு புதிய

கட்டிடங்கள் கட்டுதல், அங்கக உர ஆய்வுக்கான ஆய்வகங்கள் அமைத்தல், புதிய உயிர் உர உற்பத்தி மையங்கள் நிறுவுதல், வேளாண் விரிவாக்க மையங்கள் கட்டுதல், களப்பணியாளர்களுக்கு கையடக்கக் கணினிகள் வழங்குதல் போன்ற செயல்பாடுகள் ரூ.80.12 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

2015–2016 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.155.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.2. தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்

நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள் மற்றும் வணிகப்பயிர்களின் உற்பத்தி, சாகுபடி பரப்பு விரிவாக்கம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 வரை இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டு முதல் 50:50 என்ற விகிதத்தில் மத்திய – மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.2.1. அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்

அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் பயிர் சாகுபடி முறை சார்ந்த செயல்விளக்கங்கள், தரமான சான்று விதைகள், பண்ணை இயந்திரங்கள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் போன்ற செயல்பாடுகள் ரூ.25.04 கோடியில் செயல்படுத்தப்பட்டன.



2015–2016 ஆம் ஆண்டில், நேரடி நெல் விதைப்பு மற்றும் வரிசை நடவுக்கான செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல் நெல் இரக விதைகளுக்கான விநியோக மானியம் வழங்குதல் ஆகிய செயல்பாடுகள் ரூ.30.11 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.2.2 பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்

பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், ரூ.24.28 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2015–2016 ஆம் ஆண்டில், துவரை, உளுந்து, பச்சைப் பயறு ஆகிய பயிர்களில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில் நுட்பங்களை விளக்கும் தொகுப்பு செயல்விளக்கங்கள், நிலக்கடலை மற்றும் பருத்தி பயிர்களில் ஊடுபயிர் செயல் விளக்கங்கள், பயிர் சாகுபடி முறை சார்ந்த செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல் இரகங்களின் சான்று விதை விநியோகம் போன்ற இனங்கள் ரூ.30.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.2.3. சிறுதானியங்களுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்

சிறுதானியங்களுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட சாகுபடி முறைகளுக்கான செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல்

இரகங்களின் சான்று விதை விநியோகம் மற்றும் சிறிய வகை தெளிப்பு நீர் பாசன அமைப்புடன் கூடிய மழை நீர் அறுவடை செய்யும் அமைப்புகளை நிறுவுதல் ஆகிய செயல்பாடுகள் **2014–2015** ஆம் ஆண்டில் **ரூ.7.94** கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

**2015–2016** ஆம் ஆண்டில், மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல் இரக மற்றும் வீரிய ஒட்டு இரக சான்று விதைகள் விநியோகம் போன்ற செயல்பாடுகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.2.4.வணிகப் பயிர்களுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்

2014–2015 ஆம் ஆண்டு முதல், **பருத்தி பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்** சேலம், தர்மபுரி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தேனி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூர், தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பருத்தி பயிருக்கான முன்னோடி செயல்விளக்கங்களும், பருத்தியில் பயறு வகை ஊடுபயிர் சாகுபடி மற்றும் அடர் நடவு முறை செயல் விளக்கங்களும் ரூ. **0.28** கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

**2015–2016** ஆம் ஆண்டில், இத்திட்டம் பெரம்பலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.**0.56** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், **கரும்பு பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்** கடலூர், விழுப்புரம், சேலம், நாமக்கல், ஈரோடு, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய



மாவட்டங்களில் ரூ. **0.31** கோடியில் செயல்படுத்தப்பட்டது. **2015–2016** ஆம் ஆண்டில், இத்திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் ரூ.**0.54** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.3. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்

வேளாண் செயல்பாடுகளை இலாபகரமாக்கவும் வானிலை மாற்றத்துக்கு உகந்ததாக மாற்றவும், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் **2014–2015** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மானாவாரி பகுதிகளில் நீர்வள ஆதாரங்களை திறன்பட பயன்படுத்துவதோடு விரிவான மண்வள மேலாண்மை முறைகளையும் மேற்கொண்டு இயற்கை வள ஆதாரங்கள் பாதுகாப்பை இத்திட்டம் ஊக்கப்படுத்துகிறது. **2014–2015** ஆம் ஆண்டில், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் இனங்கள் ரூ.**16.23** கோடியில் மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டன.

**2015–2016** ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.**49.53** கோடி ஒதுக்கீட்டில், மத்திய, மாநில அரசுகளின் சரிவிகித நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.4 எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம்

எண்ணெய்வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய்வித்துக்களுக்கான மூன்று குறு இயக்கங்களை உள்ளடக்கியது **எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம்.** இத்திட்டத்திற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் **50:50** என்ற விகிதத்தில் நிதியை பகிர்ந்தளிக்கின்றன. குறைவான

உற்பத்தி திறன் கொண்ட தானியப் பயிர்களுக்கு மாற்றுப் பயிராக எண்ணெய்வித்து பயிர்களின் சாகுபடியை மேற்கொண்டு பரப்பளவை அதிகரிப்பதும், தரிசு நிலங்களில் எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய்வித்து பயிர்களின் சாகுபடி பரப்பளவை விரிவுபடுத்துவதும் இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

2015–2016 ஆம் ஆண்டில், இத்திட்டம், மத்திய, மாநில அரசுகளின் சரிவிகித நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.4.1 எண்ணெய்வித்துக்களுக்கான குறு இயக்கம் –I

நிலக்கடலை, சூரியகாந்தி, எள் மற்றும் ஆமணக்கு பயிர்களுக்காக குறு இயக்கம்–1 செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், இத்திட்டம் கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் ரூ.9.80 கோடியில் செயல்படுத்தப்பட்டது. விதைகள், மேம்படுத்தப்பட்ட பண்ணைக்கருவிகள் மற்றும் நீர் சேமிக்கும் கருவிகள் விநியோகம், முன்னோடி செயல் விளக்கங்கள் அமைத்தல், புதிய தொழில்நுட்பங்கள் குறித்து அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சி ஆகிய இனங்கள் செயல்படுத்தப்பட்டன.

2015–2016 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.4.2 எண்ணெய்ப்பனைக்கான குறு இயக்கம் –II

நீர்வடிப் பகுதி மற்றும் தரிசு நிலங்களில் எண்ணெய்ப்பனை பரப்பளவை விரிவாக்கம் செய்வதே குறு இயக்கம்–II–ன் நோக்கமாகும். கடலூர், விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர்,



திருவாரூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், 398 எக்டர் பரப்பளவில் எண்ணெய்ப்பனை சாகுபடி விரிவுபடுத்தப்பட்டதோடு, ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்ட எண்ணெய்ப்பனைகளுக்கு பராமரிப்பு மானியமும் வழங்கப்பட்டது. எண்ணெய்ப்பனை வயல்களில் ஊடுபயிர் செய்ய நடவுப்பொருள் மானிய விலையில் வழங்கப்பட்டது. மேற்கூறிய அனைத்து செயல்பாடுகளும் மொத்தம் ரூ.1.62 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.4.3 மரவகை எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான குறு இயக்கம் –III

வேம்பு, புங்கம், இலுப்பை போன்ற மரவகை எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவிப்பதே இக்குறு இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், ரூ.23 இலட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 5.5 வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில் நுட்பத்துக்கான தேசிய இயக்கம்

2014–2015 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில் நுட்பத்துக்கான

தேசிய இயக்கத்தின் கீழ் வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம், விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம், வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம், பயிர் பாதுகாப்பு மற்றும் தாவர நோய் தடுப்புக்கான துணை இயக்கம் போன்ற **நான்கு வகையான துணை இயக்கங்கள்** செயல்படுத்தப்படுகின்றன. நிர்வாக கட்டமைப்பு மூலம் தொழில் நுட்ப தகவல் பரிமாற்றம் செய்து விரிவாக்க முறையை விவசாயிகள் சார்ந்ததாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம், விதை மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம், வேளாண்துறை மூலமாகவும் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம் வேளாண் பொறியியல் துறை மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. பயிர் பாதுகாப்பு மற்றும் தாவர நோய் தடுப்புக்கான துணை இயக்கம் நேரடியாக மத்திய அரசின் வேளாண் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

### 5.5.1. வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் – மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டம்

வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டம், மத்திய மாநில அரசுகளின் 50:50 என்ற நிதி பங்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு , மீன் வளர்ப்பு, வனத்துறை, வேளாண் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று ஆகிய துறைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப்



பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் (ம) அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்களின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.இந்த இயக்கத்தின் கீழ், நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி, செயல்விளக்கங்கள், கண்டுணர் சுற்றுலா, வயல் விழாக்கள் மற்றும் பண்ணைப் பள்ளிகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2014–2015 ஆம் ஆண்டில், ரூ.40.96 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

2015–2016 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.59.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.5.2. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம்

விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்வதே, விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கத்தின் நோக்கமாகும். இவ்வியக்கத்தின் கீழ், ஒரு ஏக்கருக்குத் தேவையான ஆதார / சான்றளிக்கப்பட்ட நெல், சிறுதானியங்கள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறுவகை விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுவதோடு விவசாயிகள் தமது விதைத் தேவையை தாமாகவே பூர்த்தி செய்ய விஞ்ஞான முறையில் தரமான விதை உற்பத்தி மேற்கொள்ள உரிய பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. 2014–2015 ஆம் ஆண்டிற்கான நிதி செலவினம் ரூ.17.25 கோடி ஆகும்.

இத்திட்டம் 2015–2016 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.5.3. தேசிய மின் ஆளுமை திட்டம் –வேளாண்மை

மின் ஆளுமை உத்திகளாக இணையதள வசதிகள், தமிழ்நாடு வேளாண் தகவல் சேவை வலைதளம் (அக்ரிஸ்நெட்), **பண்ணை பயிர் மேலாண்மைத் திட்டம், அலைபேசி வாயிலாக விவசாயிகளின் புள்ளி விவரங்களை சேகரித்தல் மற்றும் விரிவான இடுபொருள் விநியோக மேலாண்மை தகவல் முறை மூலம் திட்ட பயன்களை கண்காணிக்கும் முறை** போன்றவை துறையால் உருவாக்கப்பட்டுள்ளன.

மின் ஆளுமைத் திட்டத்தின் அங்கமாக ரூ. **4.64** கோடி செலவில் அனைத்து விரிவாக்க களப்பணியாளர்களுக்கும் 3G இணைப்புடன் கூடிய **2,319** கையடக்கக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வீடியோ படங்கள் மூலம் தொழில்நுட்பங்களை கிராமங்களில் பரவலாக்கம் செய்ய **174** சிறிய ஒளிஒலி சாதனங்கள் (Handheld Mini projectors) வழங்கப்பட்டதோடு அனைத்து வேளாண் தகவல்களையும் ஒரே இடத்தில் அளிக்கும் **125** தொடுதிரை கணினி மையங்கள் ரூ.**1.26** கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

**2015–2016** ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இத்திட்டம் ரூ.**3.50** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.6.வேளாண் காப்பீட்டுத் திட்டங்கள்

இயற்கை இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க, முக்கிய வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் பல்வேறு பயிர் காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் காப்பீடு செய்யப்படுகின்றன. பல்வேறு தருணங்களில்



செயல்படுத்தப்பட்ட பயிர் காப்பீடு திட்டங்களுக்கான காப்பீட்டு கட்டணம் மத்திய, மாநில அரசுகள் மற்றும் விவசாயிகளால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. பயிர் காப்பீட்டுத் திட்டங்களுள் ஒன்றான தேசிய வேளாண் காப்பீட்டுத்திட்டம் **2000–**ஆம் ஆண்டு காரீப் பருவம் முதல் **2013** ஆம் ஆண்டு காரீப் பருவம் வரை செயல்படுத்தப்பட்டு, இத்திட்டம் **2013–2014** ஆம் ஆண்டு ராபி பருவத்தில் மாற்றி யமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டதால் விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, **2014–2015** ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டது. மற்றொரு பயிர் காப்பீட்டுத் திட்டமான வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் **2008–2009** ஆம் ஆண்டில், **8** மாவட்டங்களிலும், **2012–2013** ஆம் ஆண்டில் **11** மாவட்டங்களிலும், **2013** ஆம் ஆண்டு காரீப் பருவத்தில் **15** மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் **2013–2014** ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டதால் விலக்கிக் கொள்ளப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் **2010–2011** ஆம் ஆண்டு காரீப் பருவம் முதல் **2013** ஆம் ஆண்டு காரீப் பருவம் வரை முன்னோடி திட்டமாக கடலூர், நாமக்கல், சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களிலும், **2013–2014** ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் **2014** ஆம் ஆண்டு காரீப் பருவம் வரை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமும் **2014–2015** ஆம் ஆண்டு ராபி பருவம் முதல் விலக்கிக் கொள்ளப்பட்டது. தென்னை பயிர் காப்பீட்டுத் திட்டம் **2010–2011** ஆம் ஆண்டு

முதல் 11 மாவட்டங்களிலும், 2013–2014 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், பயிர் காப்பீட்டுத் திட்டங்களின் கீழ், இரு பருவங்களிலும் சேர்த்து ரூ.64.53 கோடி காப்பீடு கட்டண மானியமாக வழங்கப்பட்டு மொத்தம் 6.18 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2015–2016 ஆம் ஆண்டில், 8.50 இலட்சம் விவசாயிகளை பதிவு செய்ய தமிழக அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.30.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வசூலிக்கப்பட்ட பயிர் காப்பீட்டுக் கட்டணத் தொகையில், உணவுப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு 100 சதவீதம் வரையும், ஆண்டு மற்றும் வணிகப் பயிர்களுக்கு 150 சதவீதம் வரையும் வேளாண் காப்பீட்டு கழகம் இழப்பீடு வழங்குகிறது. இழப்பீட்டுத் தொகையானது பெறப்பட்ட காப்பீட்டு கட்டணத் தொகையை விட அதிகமானால், அத்தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சம விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் தமிழக அரசு பாதிக்கப்பட்ட 69,900 விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டுத் தொகையாக ரூ.71.17 கோடியினை வழங்கியுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டின் பயிர் இழப்பீட்டுத்தொகை, 2015–2016 ஆம் ஆண்டில், ரூ.444.48 கோடி (மத்திய அரசின் பங்கு : ரூ.196.84 கோடி, மாநில அரசின் பங்கு : ரூ.196.84 கோடி, இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் : ரூ.50.80 கோடி) பாதிக்கப்பட்ட 1,70,586 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



### 5.7.தென்னை வளர்ச்சி வாரிய நிதி உதவிபெறும் திட்டங்கள்

தென்னை சாகுபடி பரப்பளவை அதிகரித்து உற்பத்தியை அதிகரிக்கவும், தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கவும் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு தென்னை வளர்ச்சி வாரியம் நிதியுதவி வழங்கி வருகிறது. வேலூர் மாவட்டத்தில் உள்ள நவ்லாக் தென்னை நாற்றுப்பண்ணையில் தரமான ‘நெட்டை x குட்டை’ மற்றும் ‘குட்டை x நெட்டை’ தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மண்டல தென்னை நாற்றுப்பண்ணைகளை வலுப்படுத்தவும் தென்னை வளர்ச்சி வாரியம் உதவுகிறது. தொழில்நுட்ப செயல்விளக்கத் திடல்கள் அமைப்பதற்கு மட்டும் தென்னை வளர்ச்சி வாரியத்தின் முழு நிதியுதவி பெறப்படுகிறது. மீதமுள்ள அனைத்து இனங்களும் மத்திய – மாநில அரசுகளின் 50 : 50 நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வருடமும் சுமார் 3.40 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.8. ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை

மண்வள குறைபாடு, முறையற்ற இரசாயன உர பயன்பாட்டினால் மேலும் அதிகரித்து வருகிறது. மண்வள குறைபாட்டினை தடுப்பதற்காக, விரிவான நில அளவை, மண்மாதிரிகள் சேகரிப்பு மற்றும் ஆய்வு, விவசாயிகள்

ஒருங்கிணைந்த கையேடுகள் மூலம் மண்வகைக்கேற்ற ஊட்டச்சத்து மேலாண்மை, அமில மற்றும் களர் நிலங்களை சீர்திருத்துதல் போன்ற ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை உத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**5.8.1. நில அளவை மற்றும் நிலப்பயன்பாட்டு அமைப்பு**

உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளின்படி விரிவான நில அளவை மேற்கொண்டு, தமிழ்நாட்டின் மண்வள ஆதாரங்களின் விரிவான மற்றும் நம்பகமான விவரப்பட்டியல் தயாரிக்க கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் நில அளவை மற்றும் மண் பயன்பாட்டு அமைப்புகள் இயங்கி வருகின்றன.

**5.8.2. ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை உத்திகள்**

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மைக்கான உத்திகள் பின்வருமாறு:

- ➢ விவசாய நிலங்களின் மண்வளத்தை குறித்த தகவல்கள் அடங்கிய **விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு 67.45** இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. "**மண்வள அட்டை இயக்கத்தின்" கீழ் 2015–2016** ஆம் ஆண்டு முதல், மூன்றாண்டு காலத்தில் **81.18** இலட்சம் மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. **2015–2016** ஆம் ஆண்டில், **27.70** இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்படும்.
- ➢ வயல்களிலேயே மடக்கி உழுது மண்ணின் அங்ககச் சத்தை அதிகரிக்க ஆண்டுதோறும் **250** மெ.டன் **பசுந்தாள் உரவிதைகள்** கொள்முதல் செய்யப்பட்டு **50** சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.



- ➢ மண்ணில் தழைச்சத்தை அதிகரிக்கவும், களைகளைக் குறைக்கவும், ஆண்டுதோறும் **525** மெ.டன் நீலப்பச்சைப்பாசி மற்றும் **500** மெ.டன் அசோலா உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.
- ➢ பண்ணைக் கழிவுகளிலிருந்து புளூரோட்டஸ் மூலம் மக்கு உரம் தயாரிப்பதற்கு ஒரு கிலோ புளூரோட்டஸ் மற்றும் **5** கிலோ யூரியா அடங்கிய **3500** தளைகள், ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு விலையில்லா தளைகளாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
- ➢ கரும்பு பயிர் கழிவுகள் மேலாண்மைக்காக, கரும்புத் சோகையை உரமாக்கும் திட்டம் **2014–2015** ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் **4,817** எக்டர் பரப்பளவில் ரூ.**1.15** கோடியில் மேற்கொள்ளப்பட்டது. **2015–2016** ஆம் ஆண்டில், **20,000** எக்டர் பரப்பளவில் ரூ.**5.00** கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.9. விதைப் பெருக்குத் திட்டங்கள்**

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி பயிர்களின் தரமான சான்று விதைகள் பயிற்சி அளிக்கப்பட்ட விவசாயிகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் விதைப் பெருக்கம் செய்யப்படுகின்றன. விதைகள் உற்பத்திக்காக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. **2014–2015** ஆம் ஆண்டில் **16,181** மெ.டன் நெல் விதைகள், **308** மெ.டன் சிறுதானிய விதைகள், **3,638** மெ.டன் பயறு வகை விதைகள், **3,119** மெ.டன் எண்ணெய்வித்து விதைகள் மற்றும் **32** மெ.டன் பருத்தி

விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டன.

**2015–2016** ஆம் ஆண்டு முதல் ரூ.**25** கோடி சுழல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தரமான சான்று விதைகள் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (TANSEDA) மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 5.10. பயிர் பாதுகாப்பு

சுற்றுக் கணிப்பு முறை மூலம் பூச்சி நோய் தாக்குதல் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. பகுதி மற்றும் பயிருக்கேற்ற பூச்சி நோய் தாக்குதல் மற்றும் கட்டுப்பாடு பற்றிய அறிவுரைகள் குறுஞ்செய்திகள் மூலம் வழங்கப்படுவதோடு, குரல் வழிச் செய்திகள், வானொலி, தொலைக்காட்சி, துண்டு பிரசுரங்கள், முகாம்கள் மற்றும் செய்தித்தாள்கள் மூலம் பரவலாக்கம் செய்யப்படுகின்றன.

### 5.10.1 ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை

பயிர் பாதுகாப்புக்கான முழுமையான அணுகுமுறையாக ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறை மாநிலத்தில் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.

சுற்றுச் சூழலுக்கு உகந்த வேளாண்மையை செயல்படுத்தும் நோக்கில், வேளாண்மைத்துறை “ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மாதிரி கிராமங்களை” அமைத்துள்ளது. உயிரியல் சார்ந்த ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை உத்தியாக அதிக அளவில் பிரபலமாகி வரும் புதிய உத்தியான சுற்றுச்சூழல் பொறியியல் சார்ந்த பூச்சி மேலாண்மையில் தற்போது வேளாண்மைத் துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்க பல்வேறு திட்டங்களான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்,



எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனைக்கான தேசிய இயக்கம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் மற்றும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் விவசாயிகளிடையே இந்த அணுகுமுறையை அரசு பிரபலப்படுத்தி வருகிறது. அரசின் இம்முயற்சியால், **1984–85**ஆம் ஆண்டில் **10,926** மெ.டன்னாக இருந்த பூச்சிக் கொல்லி பயன்பாடு **2014–2015** ஆம் ஆண்டில் **2,096** மெ.டன்னாக குறைந்துள்ளது.

## 5.11. தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம்

ஐந்தாண்டுகளில் பருத்தி சாகுபடி பரப்பளவை **1.34** இலட்சம் எக்டரிலிருந்து **2.50** இலட்சம் எக்டராக அதிகரிக்கவும் எக்டருக்கு **493** கிலோ என்ற உற்பத்தி திறனை **870** கிலோ என்ற அளவிற்கு அதிகரிக்கவும் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் **2014–2015** ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. **2014–2015** ஆம் ஆண்டில், **1.70** இலட்சம் எக்டர் சாகுபடி பரப்பளவு இலக்கிற்கு **1.87** இலட்சம் எக்டர் பரப்பளவில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2015–2016** ஆம் ஆண்டில், சென்னை, நீலகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் ரூ.**40.68** கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## 5.12. தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம்

உலக வங்கியின் நிதி உதவியோடு பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்

விற்பனை மற்றும் வேளாண் வணிகம், கால்நடை வளர்ப்பு, மீன்வளம் ஆகிய துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து தெரிவு செய்யப்பட்ட **61** உப நீர்வடிப் பகுதிகளில் பாசனப்பரப்பளவு, பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

**2014–2015** ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, நீலகிரி மற்றும் சென்னை நீங்கலாக **24** மாவட்டங்களில் சிறுதானியங்கள் மற்றும் குறுதானியங்களின் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க **10,000** எக்டரில் செயல்விளக்கங்கள் அமைக்க மானியம் வழங்குதல், பாரம்பரிய சிறுதானியங்களை பயிர்செய்யும் குழுக்களுக்கு மதிப்புக்கூட்டு இயந்திரங்கள் வழங்குதல், விதை பெருக்கத்திற்காக மானியம் வழங்குதல் மற்றும் செய்தி, கல்வி (ம) தகவல் தொடர்பு செயல்பாடுகள் போன்ற இனங்கள் ரூ.**6.32** கோடியில் மேற்கொள்ளப்பட்டது.

### 5.13 பயிர் விளைச்சல் போட்டி

சிறந்த வேளாண்மை சாகுபடி முறைகளை விவசாயிகள் கடைபிடிப்பதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிர்விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற விவசாயிகள் பங்குபெறும் போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் இறவையில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, நிலக்கடலை, துவரை, உளுந்து, பச்சைபயறு, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களிலும் மானாவாரியில் நிலக்கடலைப் பயிரிலும் நடத்தப்பட்டு வருகின்றன.



ஆண்டுதோறும் **88** மாவட்ட அளவிலான போட்டிகளும் **9** மாநில அளவிலான போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெற நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு நுழைவுக் கட்டணம் ரூ.**100/–**ம், பிறப்பயிர்களுக்கு ரூ.**50/–**ம் ; மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு ரூ. **50/–**ம் பிற பயிர்களுக்கு ரூ.**25/–**ம் வசூலிக்கப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த மகசூல் பெறும் விவசாயிகளுக்கு கீழ்கண்டவாறு ரொக்கப்பரிசுகள் வழங்கப்படுகின்றன.

(ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் இடம் | இரண்டாம் இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் |
| நெல், நிலக்கடலை, பருத்தி மற்றும் கரும்பு | 25,000 | 15,000 | 15,000 | 10,000 |
| இதரபயிர்கள் | 15,000 | 10,000 | 10,000 | 5,000 |

மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை மேற்கொண்டு அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு ரூ.**5** இலட்சம் பரிசுத்தொகையும், ரூ.**3,500/–** மதிப்புள்ள பதக்கமும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் குடியரசு தின விழாவில் வழங்கப்படுகிறது. **2015–2016** ஆம் ஆண்டில் ரூ. **14.07** இலட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## 6. சேவை மையங்கள்

விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய மண் ஆய்வு கூடங்கள், உர ஆய்வகங்கள், விதை சுத்திகரிப்பு

நிலையங்கள், விதை சேமிப்புக் கிடங்குகள், அரசு விதை பண்ணைகள், உயிர் உர உற்பத்தி மையங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லி உற்பத்தி மையங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள், அங்கக உர பரிசோதனைஆய்வகங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள், நுண்ணூட்ட உர உற்பத்தி மையம், உழவர் மையங்கள், உழவர் பயிற்சி நிலையம், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்கள் போன்ற வசதிகளை துறை ஏற்படுத்தியுள்ளது.

**6.1. தரக்கட்டுப்பாடு**

அத்தியாவசியப் பொருள் சட்டம் 1955—ன் கீழ் இயற்றப்பட்ட உரக்கட்டுப்பாடு ஆணை, 1985 வேளாண்மைத் துறையால் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளுக்கு தரமான இடுபொருட்கள் குறிப்பாக உரங்களை உரக்கட்டுப்பாடு ஆணையில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை தீவிரமாக செயல்படுத்தி வழங்குவதில் துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது. தரக்கட்டுப்பாடு ஆய்வாளர்களால் சேகரிக்கப்படும் மாதிரிகளை ஆய்வு செய்ய மாநிலத்தில் **14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்** இயங்கி வருகின்றன.

2014—2015 ஆம் ஆண்டில் 17,500 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 514 எண்கள் தரம் குறைந்தவை எனக் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உரக்கட்டுப்பாடு ஆணை, 1985—இல் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அங்கக உரங்களான மண்புழு உரம், மக்கிய நகரக்கழிவு உரம் மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட



பிண்ணாக்குகளை ஆய்வு செய்ய தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் ரூ.2.84 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இரண்டு புதிய **அங்கக உர ஆய்வகங்களை** தமிழக அரசு அமைத்து வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் அமைந்துள்ள **மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம்**, ஆய்வகப் பணியாளர்களுக்கு பயிற்சிகள் அளித்து ஆய்வு உபகரணங்களின் நம்பகத் தன்மையையும், ஆய்வு முடிவுகளின் துல்லியத்தையும் உறுதி செய்வதற்கு உதவுகிறது.

மேலும், ஆண்டுதோறும் 11.26 லட்சம் மண் மாதிரிகளை ஆய்வு செய்யும் திறன் கொண்ட 30 **மண் ஆய்வுக் கூடங்கள்** மற்றும் 16 **நடமாடும் மண் ஆய்வு கூடங்கள்** மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மண்ணில் உள்ள நுண்ணூட்டச்சத்துக்களை ஆய்வு செய்ய **அனைத்து மண் ஆய்வுக் கூடங்களுக்கும்** அணுக்கதிர் ஈர்ப்பு ஒளி அலைக்கற்றைமானிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தரமான பூச்சிக்கொல்லிகளை பாதுகாப்பாக பயன்படுத்துவதை உறுதி செய்ய அறிவிக்கை செய்யப்பட்ட 15 அரசு **பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள்** செயல்படுகின்றன. பூச்சிக்கொல்லி சட்டம் 1968 மற்றும் பூச்சிக்கொல்லி விதிகள் 1971 ஆகியவற்றுக்கு உட்பட்டு, 147 பூச்சிக்கொல்லி தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் 13,321 தனியார் விநியோக மையங்களிலிருந்து கண்காணிப்பு அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மாதிரிகளின் தரத்தை இந்த ஆய்வகங்கள் ஆய்வு செய்கின்றன. 2014—2015 ஆம் ஆண்டில், 21,850 மாதிரிகள் இந்த ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

## 6.2. வேளாண் இடுபொருட்களுக்கான உற்பத்தி மையங்கள்

விவசாயிகளின் வயல்களில் தரமான சான்று விதை உற்பத்தி மேற்கொள்ள தேவையான ஆதார விதைகளை உற்பத்தி செய்வதில் 41 மாநில **அரசு விதைப்பண்ணைகள்** முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயிகளிடையே நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்கும் மையங்களாகவும் இந்த விதைப் பண்ணைகள் விளங்குகின்றன. 2015–2016 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளில், அனைத்து அரசு விதைப் பண்ணைகளையும் நவீனமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான **நுண்ணூட்டச்சத்து** சமச்சீர் பயிர் ஊட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஆண்டுதோறும் 14 வகையான அறிவிக்கை செய்யப்பட்ட நுண்ணூட்டச்சத்துக் கலவைகள் உற்பத்தி செய்யும் 1,600 மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட **அரசு நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மையம்** துறையில் உள்ளது. நுண்ணூட்ட உரக்கலவை வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில், 2,107 மெ.டன் நுண்ணூட்ட உரக்கலவை தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

அசோஸ்பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற மூன்று வகையான உயிர் உரங்கள் துறையின் **15 உயிர் உர உற்பத்தி மையங்கள்** மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இம்மையங்கள் ஆண்டுக்கு 3,000 மெ.டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. 200 கிராம் உயிர்உர பொட்டலம் ஒன்று ரூ.6/– வீதம்



விநியோகிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 2.5 இலட்சம் லிட்டர் **திரவ உயிர் உர உற்பத்தி** மேற்கொள்ள 2014–2015 ஆம் ஆண்டில், 5 உயிர்உர உற்பத்தி மையங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 7 புதிய திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் ரூ. 8.93 கோடி செலவில் நிறுவப்பட்டு வருகின்றன.

உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்ய **10 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை மையங்கள்** செயல்படுத்தப்படுகின்றன. இக்காரணிகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

கீழ்க்கண்ட உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

| உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் | உற்பத்தி மையங்கள் (எண்கள்) | கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள் மற்றும் நோய்கள் |
|---|---|---|
| டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணி) | 19 | கரும்பு இடைக்கணு புழு |
| பெத்திலிட், பிரக்கோனிட் (புழு ஒட்டுண்ணிகள்), யூலோபிட் (கூட்டுப்புழு ஒட்டுண்ணி) | 12 | தென்னை கருந்தலைப் புழு |
| பச்சை நிற மஸ்கார்டின் பூஞ்சானம் (மெட்டாரைசியம்) | 2 | தென்னை காண்டாமிருக வண்டு |
| என்.பி.வி. (நியூக்ளியர் பாலி ஹெட்ரோசிஸ் வைரஸ்) | 12 | நிலக்கடலை சிவப்பு கம்பளிப்புழு, புரூடீனியா மற்றும் பருத்தி காய்ப்புழு |

| | | |
|---|---|---|
| உயிரியல் பூஞ்சாணக்கொல்லிகள் – சூடோமோனாஸ், ட்ரைகோடெர்மா விரிடி | 12 | பருத்தி, பயறுவகைகள் மற்றும் நெற்பயிரில் ஏற்படும் நோய்கள் |

### 6.3. வேளாண் தகவல் பரவலாக்க மையங்கள்

அரசு **22 உழவர் பயிற்சி நிலையங்கள்** மூலமாக ஆண்டுதோறும் சுமார் 28,820 விவசாயிகள், உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு பண்ணை மேலாண்மை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கி வருகிறது.

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் 1985 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் **நீர் மேலாண்மை பயிற்சி நிலையத்தின்** மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 180 களப்பணியாளர்களுக்கும் 900 விவசாயிகளுக்கும் பாசன தொழில்நுட்பங்கள் மற்றும் பாசனத் திறன் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் 1975–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட **மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்** வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் முக்கிய பயிற்சி நிலையமாகும். ஆண்டுதோறும் 1,100 வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் பயிற்சி பெறுகின்றனர். திட்டமிடுதல், மதிப்பீட்டாய்வு செய்தல் தொடர்பான ஆலோசனை சேவைகள் வழங்க மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலைய வளாகத்தில், 2012–2013 ஆம் ஆண்டில் **மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் (SAMETI)** அமைக்கப்பட்டுள்ளது.



### 7. சிறப்புத் திட்டங்கள் – 2014–2015

உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்க 2014–2015 ஆம் ஆண்டில் கீழ்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

- **12,500 ஏக்கர் தரிசு** நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரும் முன்னோடித் திட்டம் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், 8,032 விவசாயிகள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டது.
- **உணவு தானிய இயக்கத்தால்** 2013–2014 ஆம் ஆண்டில் இதுவரை அடையப்பெறாத மிக அதிகமான உணவு தானிய உற்பத்தி பெறப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில் உணவு தானிய இயக்கம் ரூ.182.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.
- **திருந்திய நெல் சாகுபடி முறை** 13.65 இலட்சம் எக்டரில் கடைபிடிக்கப்பட்டதுடன் முழு கிராம அணுகுமுறையில் 3,000 கிராமங்களில் 2.61 இலட்சம் எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது.
- **துவரை சாகுபடியை இயக்க அணுகுமுறையில்** ஊக்குவிக்க நடவு முறை துவரை சாகுபடி, துல்லிய பண்ணையம், வரப்பு மற்றும் புதர் துவரை சாகுபடி, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்குதல் போன்ற செயல்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து **ரூ.55.152 கோடி** நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- விவசாயிகளை ஊக்குவித்து **துல்லிய பண்ணையம்** மற்றும் **நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டம்**

ஒவ்வொன்றையும் 5,000 எக்டர் பரப்பளவில் கடைப்பிடிக்கச் செய்ய முறையே ரூ.42.76 கோடி மற்றும் ரூ.17.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- ❖ பல்வேறு பயிர்களில் தரமான சான்று விதைகளை காலத்தே விநியோகம் செய்வதை உறுதி செய்ய, தமிழ்நாடு **மாநில விதை மேம்பாட்டு முகமை** ரூ.25.00 கோடி ஆரம்ப நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ **சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான வேளாண் செயல்பாடுகளை** பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் மாதிரி அங்ககக் கிராமங்கள், சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மாதிரி கிராமங்கள், 7 புதிய திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் மற்றும் 2 அங்கக உர ஆய்வகங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளுக்காக **ரூ. 22.47 கோடி நிதி ஒதுக்கீடு** செய்யப்பட்டது.
- ❖ வேளாண் களப்பணியாளர்கள் கிராமங்களுக்கு நிரந்தர பயணம் மேற்கொண்டு, விவசாயிகள், விவசாய குழுக்கள் மற்றும் விளைபொருள் குழுக்களை நேரடியாக சந்தித்து தொழில்நுட்ப பரிமாற்றம் செய்ய, "**விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறையின் கீழ் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தரப்பயணத் திட்டம்**" 05.01.2015 அன்று துவக்கப்பட்டு 379 வட்டாரங்களில் வேளாண்மைத்துறை வாயிலாகவும், 6 வட்டாரங்களில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை வாயிலாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ உலகக் குடும்ப பண்ணைய ஆண்டை சிறப்பிக்கும் வகையில், பண்ணை மகளிருக்கு முழு **அதிகாரம் வழங்கி குழு முறையிலான வேளாண் செயல்பாடுகளில்** ஈடுபடுத்த **770 பண்ணை மகளிர் குழுக்கள்** அமைக்கப்பட்டுள்ளன.